**அசல் வழக்கு எண். 02/2023 தேதி-30.07.2025**

**வா.சா. 2- சந்திரன்**

**<u>2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1)** நான் மணத்தட்டை கிராமத்தில் இருந்து வருகிறேன். வாதிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். 1 முதல் 4 பிரதிவாதிகளை எனக்கு தெரியும். வாதி பிரதிவாதிகளை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் நான் பிறந்தது முதல் அவர்களை தெரியும். நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா சொத்து என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்ன பரிகாரம் என்றால் சாக்கடை நீரானது 1ம் வாதியின் நிலத்திற்குள் வருவதை தடுப்பதற்கு தாக்கல் செய்யப்பட்டது. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் நான் சொல்லி எனது வழக்கறிஞர் தயார் செய்தது என்றால் சரிதான்.

2) தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் 1ம் வாதியின் தாத்தா கரிவண்டன் என்பவருக்கு பாத்தியப்பட்டது. அதன் பின்னிட்டு தாவா சொத்து 1ம் வாதியின் தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வாதிகளுக்கு தாவா சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் வாதிகளின் தந்தை அவர்களுக்கு தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்ததன்படி பாத்தியப்பட்டது. எந்த வருடம் தான செட்டில் மெண்ட் கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துகளை வாதிகள் இருவரும் பிரித்து கொண்டு தனித்தனியாக அவரவர் பங்கினை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரம் வாதிகளுக்கு இடையே ஏற்பட்டதா என்றால் அதுபற்றி தெரியாது. 1ம் பிரதிவாதியின் வீடு எந்த திசையில் உள்ளது என்றால் 1ம் வாதியின் வீட்டுக்கு வடக்கே உள்ளது. 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதியும் அவரவர் நிலங்களின்அத்துகளில் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வருகிறார்கள். மேற்சொன்னவாறு 30 வருடங்களில் வாதிக்கும் பிரதிவாதிக்கும் எந்த பிரச்சினையும் ஏற்படவில்லை என்றால் சரிதான். மேற்படி 1ம் பிரதிவாதியின் வீட்டில் இருந்து வரும் கழிவு நீரானது 1ம் வாதியின் நிலத்திற்கு வருகிறதா என்றால் 1ம் வாதியின் வீட்டின் வாசல் படி வழியே வருகிறது. மேற்படி கழிவுநீர் எத்தனை வருடங்களாக கடத்தப்பட்டு வருகின்றது என்றால் சுமார் 10 வருடங்களாக இருக்கிறது.

3) ஆனால், தற்போது அதிகமாக வருகிறது. மேற்படி 10 வருடங்களில் எந்த பிரச்சினையும் ஏற்படவில்லை என்றால் சுமார் 4 வருடங்களாக தான் பிரச்சினை இருந்து வருகிறது. 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி வீடுகளுக்கு பின்புறம் வாழைத்தோப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி கழிவுநீர் வாதியின் நிலத்திற்கு எவ்வாறு வந்தடைகிறது என்றால் 1ம் பிரதிவாதி கட்டியுள்ள கழிவுநீர் தொட்டியிலிருந்து நிரம்பி வாதியின் நிலத்திற்கு வந்தடைகிறது. மேற்படி கழிவு நீர் தொட்டி சிமெண்ட் தொட்டியா அல்லது உறை போடப்பட்டுள்ளதா என்றால்அதுபற்றி தெரியாது. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை.

என்னை 1ம் வாதி அழைத்து வந்தார். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் தாவா சொத்தை அளவீடு செய்து சுற்றுச்சுவர் அமைக்கும் போது பிரச்சினை ஏற்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சுற்றுச்சுவர் அமைக்க 1ம் வாதியின் நிலத்தில்தான் அஸ்திவாரம் போடப்பட்டதா என்றால் சரிதான். மேற்படி சுற்றுச்சுவர் கட்டுவதில் ஏற்பட்ட பிரச்சினையை பின்னிட்டுதான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கு முன்பே மேற்படி கழிவுநீர் பிரச்சினை இருந்து வந்து அதுசம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. காவல் நிலையத்தில் அளித்த புகார் சம்மந்தமான விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும், ஆனால் முழுமையாக தெரியாது.

4) 1ம் வாதி 1ம் பிரதிவாதியின் மீ து குற்றவியல் நடுவர் நீதிமன்றம்-எண்.2, குளித்தலை CC No.111/2022 என்ற குற்ற வழக்கை தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி குற்ற வழக்கில் 1ம் வாதி மேற்சொன்ன சுற்றுச்சுவர் பிரச்சினை சம்மந்தமாக 1ம் பிரதிவாதியின் மீது தாக்கல் செய்யப்பட்டு பின்பு 1ம் வாதி அவ்வழக்கை திரும்ப பெற்றுக்கொண்டார் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி குற்ற வழக்கு திரும்ப பெறப்பட்டதை மறைத்து இவ்வழக்கை வாதிகள் பொய்யாக தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. நான் வாதிகளுக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யகா சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி ஆக வேண்டுமென்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**